# கழுகின் சத்தம்

## நவம்பர் 29, 2023

3



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து


அப்பொழுது தேவன் செய்த
அற்புதங்கள் செய்தித்தாள்களின்
முன்பக்கத்தில் வெளியிடப்பட்டன.
முதலாம், இரண்டாம், மூன்றாம்
பக்கங்கள் முழுவதுமே கூட்டங்கள்
பற்றிய கட்டுரைகளை மாத்திரம்
கொண்டதாயிருந்தன
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 62-06-03 கடைசிக் கால சுவிசேஷபணி

20. அண்மையில் தென் ஆப்பிரிக்கா வில் எங்களுக்கு ஒரு மகத்தான கூட்டம் இருந்தது. அது சில மணி நேரத்துக்குள், ஆப்பிரிக்காவின் போக்கு முழுவதையுமே மாற்றி அமைத்துவிட்டது. அப்பொழுது தேவன் செய்த அற்புதங்கள் செய்தித்தாள் களின் முன்பக்கத்தில் வெளியிடப்பட்டன. முதலாம், இரண்டாம், மூன்றாம் பக்கங்கள் முழுவதுமே கூட்டங்கள் பற்றிய கட்டுரை களை மாத்திரம் கொண்டதாயிருந்தன. நான் முதலில் அங்கு சென்றபோது, யாருமே ஒத்துழைக்கவில்லை. கூட்டங் களுக்கு செல்லும் ஒருவருக்கு அவர்கள் பெட்ரோல் கூட விற்க மறுத்தனர் இவரைப் போன்ற மூடபக்தி வைராக்கியம் கொண்ட வரைப் பார்த்ததுண்டா?'' என்றனர்.

ஆனால் அடுத்த நாள் அவருக்கு பெட் ரோலை இலவசமாகக் கொடுக்க முன் வந்தனர். பாருங்கள்? அந்த வித்தியா சத்தை பார்த்தீர்களா? நான்... ஏதோ ஒன்று நடந்தது. அவர் ஒரு மிருகக் குட்டியை (cub) கொஞ்சிக் கொண்டிருந்தார். அவரி டம் ஒருவர் “எங்கு போகின்றீர்கள்?'' என்று கேட்டார்.

“நான் ஜோஹன்னஸ் பர்க் செல்கி றேன்” என்றார்.

அவர், “ஓ, நீங்கள் வியாபாரியா?”

“இல்லை, நான் சகோ. பிரன்ஹாமை காண கூட்டத்திற்கு செல்கிறேன்''

''நீங்கள் அதைக் காட்டிலும் புத்திசாலி யைப் போல் அல்லவா காண்கிறீர்கள்?''

அவர், “நல்லது, நான் ஒரு கிறிஸ்த வன். நான் கூட்டத்திற்கு சென்று கொண் டிருக்கிறேன்” என்றார்.

''அப்படியானால் வேறெங்காவது சென்று பெட்ரோல் வாங்கிக் கொள்ளுங் கள்.''

எனவே அடுத்த நாள் திரும்பி வரும் போது, அதற்கும் டிரான்ஸ்வாலுக்கும் இடையே, பெட்ரோல் நிறைக்கும் இடம் அது ஒன்றுதான். அவர் அதைக் கடந்து பெட்ரோல் நிறைக்கும் அடுத்த இடத்துக்கு செல்ல முயன்ற போது இவர் ஓடிப்போய் அவரைப் பிடித்து, ''இங்கு வாருங்கள், இங்கு வாருங்கள்'' என்றழைத்தார். எல்லா செய்தித்தாள்களும், முன் பக்கத்திலும் இரண்டாம் பக்கத்திலும், நமது கர்த்தர் செய்தவைகளை நிறைய வெளியிட் டிருந்தன. எனவே நாம் அதற்கு நன்றி யுள்ளவர்களாயிருக்கிறோம்.

# மீட்பு சமீபமாயிருக்கிறது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். பாருங்கள்? ஏதோ ஒன்று நடக்கவிருக்கிறது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 62-06-03 கடைசிக் கால சுவிசேஷபணி

செய்தித்தாளை படிக்க அறியும் எவரும்... வானம் கறுத்து அந்தகாரப்படு கின்றது, மேகங்கள் தோன்றுகின்றன என்பதை நாம் காணும்போது, மழை பெய்யப் போகின்றது என்பதை நாம் அறிந்து கொள்கிறோம். அதை நாம் காற்றில் உணருகிறோம். தூரத்தில் மின்னல் கொடிபடர்ந்து, காற்று பலமாக அடிக்கும் போது, புயல் வரப்போகிறதென்றும், விரை வில் மழை பெய்யுமென்றும் அறிகிறோம். அது போன்று, செய்தித்தாளைப் படிக்க இயலும் எவரும், தேசங்களின் நிலையைக் கண்டு, ஏதோ ஒன்று நடக்கவிருக்கிறது என்பதை அறிந்து கொள்வர். ஒருவர் தோளில் துப்பாக்கியை வைத்துக்

கொண்டு, யுத்தத்துக்காக எல்லா விதமான போராயுதங்களையும் வைத்துக் கொண்டு, எவ்வித உடன்பாடுமின்றி ஒருவரோ டொருவர் விவாதம் செய்து கொண்டு, மாநாடுகளில் காலணிகளால் உதைத்தும், மேசையைக் கையால் பலமாக குத்து வதையும் காணும் போது, ஏதோ ஒன்று நடக்கவிருக்கிறது என்பதை அறிந்து கொள்வீர்கள். அது ஜனங்களுக்கு அத்த கைய உணர்ச்சியை அளிக்கிறது. உலகம் என்று நாம் அழைக்கும் அந்த வெளிப்புற உலகம், அழிவு வரப்போகிறதென்றும், இந்த அணுசக்தி காலத்தில் அணு ஆயுதங் கள் வெடிக்கலாம் என்னும் உணர்வைப் பெற்றுள்ளது.

ஆனால் கிறிஸ்தவனோ அது கர்த்தருடைய வருகையின் அடையாளம் என்பதை அறிந்திருக்கிறான். பாருங்கள்? ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளது. அதன்

மூலம் நீங்கள் எதை காண்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது. ஏனெனில் அந்த நேரத்தில் என்ன நேரிடுமென்று நமது கர்த்தர் நமக்கு திட்ட வட்டமாக அறிவித் துள்ளார். அந்த வேளையும் நாழிகையும் நாம் அறியாமல் போனாலும், ஏதோ ஒன்றை இப்பொழுது நாம் நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதை அறிவோம்.

26. சில நாட்களுக்கு முன்பு, ஆப்பிரிக் காவில் நான் கண்ட ஒரு ஆட்டுக்குட்டி யைக் குறித்து இங்கு கூறினேன். அது பட்டியிலிருந்து வெளியே விடப்பட்டு அமைதியாக புல் மேய்ந்து கொண்டிருந் தது. அப்பொழுது திடீரென்று அதற்கு பயமுண்டானது. இந்த குட்டிக்கு என்ன நேர்ந்ததென்று நான் வியந்தேன். ஒரு செம்மறியாடு வழி தவறிவிட்டால் தானாகவே தன் இடத்திற்கு மீண்டும் வர அதற்கு தெரியாது. அது முழுவதுமாக வழி

தவறிப் போய் விடும். ஆகையால் தான் கர்த்தர் நம்மை செம்மறியாடுகளுக்கு ஒப்பிடுகிறார், நாம் வழிதப்பினால், நம்மை மீண்டும் கொண்டு வர ஒருவருக்கு மாத்திரமே முடியும், அவர்தான் மேய்ப்பர். இந்த ஆட்டுக் குட்டி பட்டியிலிருந்து வெகுதூரம் அலைந்து சென்று, கதறிக் கொண்டிருந்தது. அந்த புல்லின் கீழ் பதுங்கியுள்ளதை நான் கவனித்தேன், ஆனால் அது கவனிக்கவில்லை. ஒரு ஆட்டுக் குட்டிகோ அல்லது செம்மறி யாடுக்கோ, மானைப் போன்று மோப்பம் பிடித்து எதிரியை அறிந்து கொள்ள முடியாது. ஆனால் அது மரணம் அருகிலுள்ளது என்னும் உணர்வைப் பெறும். அங்கு ஒரு சிங்கம் மெல்ல பதுங்கி வந்தது. அது ஆட்டுக் குட்டியை மோப்பம் பிடித்து, அதைக் கொன்று தின்ன அங்கு வந்தது. ஆட்டுக் குட்டிக்கு

பயமெடுத்துக் கொண்டது. அதற்கு காரணம் தெரியவில்லை, ஆனால் மரணம் மிக அருகில் பதுங்கியுள்ளது என்பதால் அது பயந்தது.

27. உலகமும் அதே போன்ற பயங் கொண்ட நிலையில் தற்பொழுது உள்ளத னால், அவர்கள் தெருவில் தொண்ணூறு மைல் வேகத்தில் காரோட்டி சென்று, மது கடைக்குள் நுழைந்து, இரண்டு மணி நேரம் மது அருந்தி விட்டு, வீடு செல்கின்றனர். அது பலமான தாக்குதல்...

யாரிடமாவது நீங்கள் பேசினால், அவர் கள் கோபமடைகின்றனர். அன்றொரு இரவு நான் கூடாரத்தில் பேசிவிட்டு, சகோ. நெவிலுக்கு வந்திருந்த சில அழைப்புகளை நான் எடுத்துக் கொள்ளலாம் என்று கருதி ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். ஒவ்வொரு முறையும் நான் நர்ஸ் அல்லது டாக்டரிடம்

பேசினபோது, அவர்கள், ''எனக்கு ஒன்றும் தெரியாது என்று கோபமாக பதிலளித்தனர்.

“என்ன நேர்ந்தது? எல்லோருமே கோபத்தை வெளிப்படுத்துகின்றனரே” என்று நினைத்தேன். மனோதத்துவ நிபுணர் கள் இப்பொழுது டாக்டர்களுக்கு சிகிச்சை செய்ய வேண்டியதாயுள்ளது.

ஆனால் அதற்கு ஒரு வழியுண்டு. அது தான் கிறிஸ்து.

28. கிறிஸ்தவன் அந்த நிலையில் இருக்கக் கூடாது, நாம் மகிழ்ச்சி கொண்ட வர்களாய் கர்த்தருடைய வருகைக்காக காத்திருக்க வேண்டும். ஏனெனில் அது அருகாமையிலுள்ளது; கல்வாரியின் குளிர்ந்த காற்றை நம்மால் உணர முடிகின் றது. வாக்குத்தத்தம் செய்த பரலோகத்தின் தேவனை, இயேசு இவ்வுலகில் வாழ்ந்த போது புரிந்த அதே செயல்கள் கடைசி

நாட்களில் திரும்பவும் வரும் என்னும் வாக்குத்தத்தத்தையும் நாம் காணும் போது, அது கண்கூடாக நிறைவேறுவதை நாம் காண்கிறோம். அது என்ன? மழை வரும் போது கிடைக்க பெறும் புத்துணர்ச்சியைப் போன்ற புத்துணர்ச்சியின் சுவாசமே. பாருங்கள்? மீட்பு சமீபமாயிருக்கிறது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். பாருங் கள்? ஏதோ ஒன்று நடக்கவிருக்கிறது. உலகம் அதை காண்பதில்லை. அவர்கள், முன் காலங்களில் நடந்ததுபோல், இப்பொ ழுதும் அதை கேலி செய்கின்றனர். ஆனால் நாமோ அது அருகாமையில் வந்துகொண் டிருக்கிறது என்பதை அறிவோம்.

தேவன் கௌரவிக்க வேண்டுமானால், அதற்காக ஏதாவதொன்றை நீங்கள் செய்ய வேண்டியவர்களாயிருக்கின்றீர்கள். எல்லாவற்றையும் எளிதாகப் பெற்றுக் கொள்பவர், அதற்காக ஒன்றையுமே செய்வதில்லை. பாருங்கள்? தேவனுடைய வரம் என்னமோ இலவசமாகத்தான் அளிக்கப்படுகிறது என்பது உண்மை. ஆனால் நீங்களோ...



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 63-09-01E பதறல்

5. பின்பு கிறிஸ்துமஸ் கழிந்து, தென் பாகத்திலுள்ள நண்பர்களுடன் கழிக்க விரும்புகிறேன். ஜனவரி மாதத்தின் போது பீனிக்ஸில் இருப்போம். பின்னர் வெளி நாட்டு அழைப்புக்காக காத்திருப்போம். அது வந்தால், அதற்கான கூட்டங்களுக் காக ஆயத்தம் செய்வோம். வெளிநாட்டுக் கூட்டங்களை ஒழுங்கு செய்வதற்கென சகோ. பார்டர்ஸ் கடிதம் எழுதிக் கொண் டிருக்கிறார். கடிதப் போக்குவரத்து நடந்து கொண்டிருக்கிறது. அது ஆயத்தமான வுடன், உலக பயணம் ஒன்றை மேற் கொள்ள எத்தனித்துள்ளோம். அதற்குரிய சூழ்நிலை உருவாகும் வரை நாங்கள் காத்திருக்கவேண்டும்.

அங்கு கூட்டங்கள் திரளாயிருக்கும். அவர்களைக் கட்டிடங்களில் அடைக்க முடியாது. திறந்த வெளிகளில் தான் கூட்டங்களை நடத்தவேண்டும். சில சமயங்களில் 5,00,000-க்கும் அதிகமான வர்கள் ஒரே ஒரு கூட்டத்திற்கு வருவார் கள். அதை நம்மால் நம்பவே முடியாது. அநேக நாட்கள் நடக்கும் கூட்டத்திற்கு வருபவரின் எண்ணிக்கையல்ல அது - ஒரே ஒரு கூட்டத்திற்கு வரும் ஜனத் தொகை. சாதாரணமாக சுவிசேஷகர்கள், ஆறு வாரங்களில் எத்தனை பேர் கூட்டத் திற்கு வந்திருந்தனர் என்று கணக்கிடுவது வழக்கம். பாருங்கள்? நாமோ ஒரு நாளில், ஒரு கூட்டத்திற்கு எத்தனை பேர் வந் திருந்தனர் என்று கணக்கிடுகிறோம். அவர் களை உட்கார வைக்க அங்கு போதிய ஸ்தலம் கிடையாது. அவர்களை நாம் திறந்த வெளியில்தான் உட்கார வைக்க வேண்டும். எனவே மழைக்காலமில்லாத

சமயங்களில் மாத்திரமே நாம் அங்கு கூட்டங்களை நடத்த முடியும். சில நேரங்களில் நல்ல ஆடை அணிந்துள்ள பெண்கள் மழையில் நனைந்து, தலைமயிர் தலையுடன் ஒட்டிக்கொண்டு, நாள் முழுவதும் அங்கு உட்கார்ந்து கொண்டிருப்பதை நான் கண்டிருக்கிறேன். அங்கு பயங்கர மழையும், இடியும் மின்னலும் காற்றும் நேரிடுவது வழக்கம். ஆனாலும் இவர்கள் அந்த மழையிலும் ஒருவரையொருவர் நெரித்துக் கொண்டு நான் அவர்களுக்காக ஜெபம் செய்யுமளவும் மழையில் நனைந்தவர்களாய் அங்கேயே உட்கார்ந்து கொண்டிருப்பார்கள். **பாருங்கள் அப்படிப்பட்ட விசுவாசத்தை கர்த்தர் கௌரவிக்கிறார் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவர் உண்மையாகவே கௌரவிக்கிறார்.**

6. **தேவன் கௌரவிக்க வேண்டுமானால், அதற்காக ஏதாவதொன்றை நீங்கள்**

**செய்ய வேண்டியவர்களாயிருக்கின்றீர்கள். எல்லாவற்றையும் எளிதாகப் பெற்றுக் கொள்பவர், அதற்காக ஒன்றையுமே செய்வ தில்லை. பாருங்கள்? தேவனுடைய வரம் என்னமோ இலவசமாகத்தான் அளிக்கப் படுகிறது என்பது உண்மை. ஆனால் நீங்களோ...**

இது இப்படியிருக்கிறது. ஒருவன் வெள்ளிக் கரண்டியுடன் பிறந்தான் என்றால் (அந்தப் பழமொழியை நீங்கள் கேட்டிருக்கிறீர்கள்) (அதாவது எல்லா சௌகரியங்களுடனும் பிறந்தவன் என்று அர்த்தம் - தமிழாக்கியோன்). அவன் எதை யுமே பொருட்டாக எண்ணுவதில்லை. **ஆனால் ஒருவன் அதற்காக முயற்சி எடுக்கும் போது, அதன் முக்கியத்துவத்தை அவன் அறிந்து கொள்கிறான்.**

# உரியா



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 61-08-27 கிருபையின் செய்தி

65. தாவீதைப் பாருங்கள். அவன் எப்படி இத்தகைய செயலைப் புரியலாம். குழியில் குதித்து சிங்கத்தைக் கொன்றவன். தாவீதுக்கு ஐந்நூறு மனைவிகள் இருந்த போது, அவன் எப்படி உரியாவின் அழகிய மனைவியாகிய பத்சேபாளை எடுத்துக் கொள்ளலாம்? அவள் குளித்துக் கொண்டிருக்கும்போது அவன் அவளைப் பார்த்துவிட்டான். அது அஜாக்கிரதை! அவள் குளிக்கச் சென்றபோது, ராஜா ஒவ்வொரு நாளும் அந்த சுவற்றின் அருகே வருகிறான் என்பதை அவள் அறிந்த போதிலும், திரையை கீழே இழுத்து மூட அவள் மறந்துவிட்டாள்.

அது தான் இன்றும் நேரிடுகிறது. இன்றைய ஸ்திரீகள் அஜாக்கிரதையின்

காரணமாயல்ல, வேண்டுமென்றே தெருக்களில் சிறிது ஆடைகளை மாத்திரம் அணிந்து நிர்வாணமாக நடக்கின்றனர் என்று எண்ணுகின்றேன். அது அவமானம் இப்படி செய்து விட்டு, ஆண்கள் ஏன் அவர்களப் பார்த்து சீட்டியடிக்க வேண்டும் என்று வியக்கின்றனர். அவர்கள சீட்டி அடிக்கச்செய்ய வேண்டும் என்பதற்காகவே அவர்கள் அவ்வாறு செய்கின்றனர். அவர்களுக்கு அது தெரியும். அதை தெரிந்து கொள்ள அவர்களுக்கு போதிய ஞானம் உள்ளது. அவர்கள் இவ்வாறு செய்ய விருப்பங்கொண்டுள்ளதால், இப்படி செய்கின்றனர். அது அவர்களுடைய இருதயத்திலுள்ளது. அவர்கள் நடத்தை கெட்டவர்கள் என்று நீங்கள் அவர்களிடம் கூறுவீர்களானால், அவர்கள் வாக்குவாதம் செய்வார்கள். அவர்கள் உடலுறவு விஷயத்தில் நடத்தை கெட்டவர்களாயிராமல், லீலிப் புஷ்பத்தைப் போல அவ்வளவு தூய்மையாக இருக்க

லாம். ஆனால் அவர்கள் மேல் ஒரு ஆவி தங்கியுள்ளது. பிசாசின் அபிஷேகம் தங்கி யுள்ளது என்பதை ஞாபகம் கொள்ளுங் கள். அது ஏதாவது ஒரு மனிதனின் ஆத்துமாவை நரகத்துக்கு அனுப்பும். “ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபச்சாரஞ் செய்தாயிற்று” எனறு வேதம் கூறுகிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள். சகோதரியே, ஞாபகம் கொள், நீ உன் வாழ்க்கையில் உண்மையாக விபச்சாரஞ் செய்யாமலிருந்த போதிலும், விபச்சாரஞ் செய்த குற்றத்துக்காக நீ பதில் கூறவேண்டிய நிலை ஏற்படும். ஏனெனில் நீ உடுத்திக் கொண்டிருந்த விதத்தில் உன்னைப் பார்த்த அந்த பாவி விபச்சாரம் செய்த குற்றத்துக்கு ஆளாவான். நியாயத் தீர்ப்பு நாளிலே விபச்சாரம் செய்த குற்றத் துக்காக நீ பதில் கூற வேண்டியிருக்கும். அவன் குற்றவாளியாக தீர்க்கப்படும் போது.....

66. அவர் அந்த புத்தகத்தில் “விபச்சாரம் செய்தான்” என்று எழுதி வைத்திருப்பார்.

“யாருடன்”

“திருமதி. ஜான் டோவுடன்”,

“திருமதி ஜான் டோ, அதைக் குறித்து என்ன?”

“நான் சத்தியம் செய்கிறேன்.... என் வாழ்க்கை குறிப்பு உங்களுக்குத் தெரியும். என் சொந்த கணவரையன்றி வேறு யாருடனும் நான் வாழவில்லை”.

“ஆனால் இந்த மனிதன் விபச்சாரம் செய்யக் காரணமாயிருக்கும் அளவுக்கு நீ உடை உடுத்தியிருந்தாய். எனவே அவ னுடன் நீ விபச்சாரம் செய்த குற்றத்துக்கு ஆளாகின்றாய், அவன் உன்னை இச்சை யோடு பார்த்தான் என்றால், நீ தான் அதற்கு பொறுப்பு. நீ அந்த விதமாக உன்னை காண்பித்துக் கொண்டாய்.”

67. ஏவாளைப் போலவே பத்சேபாளும் தவறு செய்தாள். ஏவாளின் தவறில் ஆதாம் சம்பந்தப்பட்டிருந்தான். நாம் எப்பொழுதுமே பெண்களை குறைகூறிக் கொண்டிருக்கிறோம் என்று நினைக்கிறேன். தேவனுடைய புத்திரரே, மனிதர்களே, நீங்கள் பெண்களைக் காட்டிலும் பெலமான இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று எனக்குத் தெரியும். அது உண்மை. நீங்கள் பெண்களைக் காட்டிலும் பெலமானவர்கள். அது உண்மை. எனவே அது போல் நடந்து கொள்ளுங்கள். நீங்கள் ஒரு சிறு பெண்ணைக் கொண்டு சென்று, அவளை பலவந்தப்படுத்தி, அவள் வாழ்க்கையை பாழாக்கிவிடாதீர்கள். நீங்கள் தேவனுடைய புத்திரராக, அவள் தவறு செய்கிறாள் என்பதை அவளுக்கு உணர்த்துங்கள். தேவனுடைய புத்திரனைப் போல் நில்லுங்கள். அவள் உங்களுடைய சகோதரி, ஆம் ஐயா, நாம் செய்வது என்னவெனில், தேவனுடைய புத்திரர் என்று அழைக்கப்படும்

ஸ்தாபன அங்கத்தினராகிய நாம், ஒவ்வொரு பெண்ணையும் வெளியே அழைத்துச் செல்கிறோம். விவாகமான ஒரு மனிதன் ஒரு பெண்ணை கெடுத்து விட்ட காரணத்தாலும் கூட, அவள் நடத்தை கெட்டவளாக மாறியிருக்கக் கூடும் என்பதை ஞாபகம் கொள்ளுங்கள். எனவே பானை கெண்டியை (Kettle) பார்த்து, அது கறுப்பாயுள்ளது என்று கூற முடியாது. எனவே ஞாபகம் கொள்ளுங் கள், பாவம் தான் இவையனைத்தையும் செய்கிறது.

நாம் அனைவருமே மரணத்துக்கு கீழ்ப்படுத்தப்பட்டு, அதன் காரணமாக மரிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.

68. தாவீது அந்த பொல்லாத செயலைப் புரிந்தபோது, அவனுடைய நியாயத்தீர்ப்பே அவனைக் கொன்றிருக்க வேண்டும். தீர்க்கதரிசி அவனிடம் வந்த போது, அது மறைந்திருக்கிறது என்று

அவன் எண்ணினான். தீர்க்கதரிசி அவன் முன்னால் நின்று, “தாவீதே, எல்லாமே சரியாக நடந்து கொண்டிருக்கிறதா?” என்று கேட்டான்.

தாவீது, “எல்லாமே நன்றாய் நடக் கிறது” என்று விடையளித்தான் .

தாவீது நீண்ட அங்கியும் பெரிய கிரீடமும் அணிந்திருந்தான். அங்கு அவ னுடைய சிறந்த தளபதியான யோவாப் யுத்தத்தை நடத்திக் கொண்டிருந்தான். அவன் சத்துருக்கள் அனைவரையும் எல்லைக்குள் புகாதபடிக்கு அப்பால் வைத்திருந்தான். எல்லாமே நன்றாக நடந்து கொண்டிருந்தது, பத்சேபாள் தாவீதின் மூலம் கர்ப்பவதியானாள். அவன் உரியாவை போர்க்களத்துக்கு அனுப்பி, யோவாபை அவன் பக்கத்தில் நிறுத்தி, பின்பு யோவாப் அவனிடமிருந்து விலகும் படி செய்தான். உரியா பட்டயத்தைக் கையில் ஏந்தினவனாய், கேடயத்தில்

இரத்தம் படிந்து, சூரிய அஸ்தமனத் தின்போது மரித்துப் போனான். அவன் யூத மார்க்கத்தை தழுவினவனாய், இஸ்ரவேல ருக்காக நின்று சண்டையிட்டான். யோவாப் திரும்பி வந்து உரியா மரித்து போனான் என்று சொன்னபோது, தாவீது, “எல்லாமே நல்ல விதமாக முடிந்து விட்டது. அவனுடைய மனைவியை நான் எடுத்துக் கொண்டேன். எல்லாமே சரியாகி விடும். அவன் மூலம் எனக்கு ஒரு குழந்தையும் பிறந்துவிட்டது” என்று எண்ணினான், ஆனால் குழந்தை வியாதிப் பட்டது. அது மரிக்கத் தொடங்கினது. உயிரைக் காப்பாற்ற தாவீது தன்னால் இயன்ற அனைத்தும் செய்தான். ஒருக்கால் எல்லா மருத்துவர்களும் வந்திருப்பார்கள். ஆனால் பயனில்லை. முடிவில் அந்த குழந்தை மரித்துப் போனது. குழந்தை மரித்த விஷயத்தை அவர்கள் தாவீதினிடம் கூறப் பயந்தனர். எல்லாமே மறைந்திருந் ததாக தாவீது எண்ணியிருந்தான். அவன்

பத்சேபாளை ஆறுதல்படுத்தினான். அவனுக்கு இத்தனை மனைவிகள் இருந்தபோதிலும் கூட, பத்சேபாளையும் தன் மனைவியாக சேர்த்துக் கொண்டான்.

69. அந்த வழுக்கை தலை கிழவன் நாத்தான் தீர்க்கதரிசி வனாந்தரத்திலிருந்து புறப்பட்டு வந்து, "தாவீதே, எல்லாம் எப்படி நடந்து கொண்டிருக்கிறது?" என்று கேட்டான்.

"அருமை! அருமை! தேவனுடைய வயோதிப தீர்க்கதரிசியே, நீவிர் நீடுழி வாழ்க! அல்லேலூயா" என்று தாவீது கூறினான். ஓ, அவன்.... எல்லாமே நன்றாயிருக்கிறது என்று அவன் எண்ணினான். அவன் அதை மறைத்துவிடலாம் என்று நினைத்தான்.

ஆனால் தேவனிடத்திலிருந்து நீங்கள் ஒன்றையும் மறைக்க முடியாது! நீங்கள் இப்பொழுது மனதில் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை அவர்

அறிவார். உங்கள் சிந்தனைகளை அவர் அறிவார். ஏனெனில் அவர் தேவனா யிருக்கிறார். இன்று காலை இக்கட்டிடத்தி லுள்ள பரிசுத்த ஆவியானவருக்கு, நீங்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்றும், நீங்கள் யாரென்றும் நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள் என்றும், நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள் என்றும் தெரி யும். ஏனெனில் இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்.

70. தேவன் அதை அந்த தீர்க்கதரிசிக்கு வெளிப்படுத்தினர். அவன், "தாவீதே, சாலையின் இந்தப் பக்கத்தில் ஒரு ஐசுவரியவான் வாழ்ந்து வந்தான், அவ னுக்கு ஆடுகள் வெகு திரளாயிருந்தன. அவன் மிகுந்த ஐசுவரியம் படைத்தவனாக இருந்தான். சாலையின் மறுபுறத்தில் ஒரு தரித்திரன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு ஒரு ஆட்டுக்குட்டி மாத்திரமே இருந்தது. அவனுடைய குமாரத்தியைப் போல் அவன் அதை செல்லமாக வளர்த்தான்.

அவன் சாப்பிட்ட அதே கரண்டியினால் அதற்கு ஊட்டினான். அவன் அந்த ஆட்டுக் குட்டியுடன் படுத்து உறங்கினான். எல்லாமே.... அது அவனுடைய குமாரத்தியைப் போல் வளர்ந்து வந்தது. ஒரு நாள் வழிப்போக்கன் ஒருவன் ஐசுவரியவானிடத்தில் வந்தான். அந்த வழிப்போக்கனுக்கு சமையல் செய்ய தன்னுடைய ஆடுகளில் ஒன்றைப்பிடிக்க அந்த ஐசுவரியவானுக்கு மனதில்லை. எனவே அவன் மறுபுறம் சென்று அந்த தரித்திரனுடைய ஆட்டுக்குட்டியை பலவந்தமாய்கொண்டு வந்து, அதைக் கொன்று, விருந்து பண்ணினான்" என்றான்.

71. அது தாவீதின் மாம்ச இச்சை. அவனுக்கு ஐந்நூறு மனைவிகள் இருந்தனர். ஆயினும் அவன் உரியாவின் மனைவியைக் கண்ட போது, தன் மாம்ச இச்சையைத் தீர்த்துக்கொள்ள தன் ஐந்நூறு மனைவிகளில் ஒருவளிடம் பிரவேசிக்க அவனுக்கு மனதில்லாமல், வேருறொரு

மனிதனுடைய மனைவியிடம் பிரவேசித்து, அவள் கர்ப்பவதியானாள் என்று கண்டபோது, உரியாவைக் கொன்று போட்டான். தான் செய்தது இன்னதென்று தாவீது அறிந்திருக்கவில்லை. எனவே தாவீது தீர்ப்புக் கூற ஆயத்தமாயிருந்தான். நாமும் அந்நிலையில் தான் உள்ளோம். நாம் எப்பொழுதுமே மற்றவனைக் குறித்து தீர்ப்பு கூறுகின்றோம். ஆனால் அது நமக்கென்று வரும் போது, ஓ, அது வித்தியாசமாகிவிடுகின்றது.

“இதைச் செய்தவன் மரணத்துக்குப் பாத்திரன்” என்றான் தாவீது.

அந்த வயோதிப தீர்க்கதரிசியினுடைய கண்கள் குறுகின. அவன், “தாவீதே, நீ நிச்சயமாக சாகமாட்டாய்” என்றான். கிருபை உடனடியாக வேகமாக கிரியை செய்வதைக் கவனியுங்கள். தீர்க்கதரிசியின் மீது ஆவியானவர் இறங்கி, தாவீதின் ஜீவனைக் காப்பாற்றினார். கிருபை.

“நிச்சயமாக நீ சாகமாட்டாய். ஆனால் உன் இருதயம் சுத்திகரிக்கப்படும் வரைக்கும் பட்டயம் உன் வீட்டை விட்டு நீங்குவ தில்லை. ஏனெனில் நீயே அந்த ஐசுவரிய வான். ”ஓ, அது அப்பொழுது வித்தியாச மாக இருந்தது. இல்லயா?“

தாவீதின் சொந்த தீர்ப்பே, “இந்த மனிதன் சாகவேண்டும், அவன் திரும்பச் செலுத்த வேண்டும், அவன் தன் உயி ரையே அதற்கு பதிலாக செலுத்த வேண் டும்” என்று கூறினபோது, தாவீதைக் காத்தது எது?

தீர்க்கதரிசி, “நிச்சயமாக (கிருபை) நீ சாகமாட்டாய். தாவீதே, நீ சாகவே மாட்டாய். கிருபை உன்னைக் காத்தது” என்றான், தாவீதுக்கு உண்டான கிருபையே அவனைக் காத்தது. ஓ, என்னே!

கிருபை இல்லாமல் போயிருந்தால், நாமெல்லாரும் எங்கே இருந்திருப்போம்? அது சரியா? நிச்சயமாக.

72. இராஜாதிபத்திய கிருபை (sovereign grace) இராஜாதி பத்தியம் கொண்ட ஒருவரிடமிருந்து வருகிறது, இராஜாதிபத்திய கிருபை (sovereign grace) இராஜாதி பத்தியம் கொண்ட ஒருவரிட மிருந்து வருகிறது, இராஜாதிபத்தியம் என்ன செய்யும்? அது என்ன வேண்டு மானாலும் செய்யும். இதை இப்பொழுது கவனியுங்கள். இராஜாதிபத்தியம் கொண் டவர் மாத்திரமே இராஜாதிபத்திய கிருபையை அளிக்கக்கூடும். தேவன் இராஜாதிபத்தியமுள்ளவர், எனவே அவ ரால் இராஜாதிபத்திய கிருபையை அளிக்க முடியும். கிருபை இராஜாதிபத்தியமுள்ள தாய் இருக்கிறபடியால், அது யாரையும் கேட்கவேண்டிய அவசியமில்லை. அது தன் விருப்பப்படி என்ன வேண்டுமா னாலும் செய்யும். அது அற்புதமான தல்லவா? அது, "நான் இதை செய்யலாமா, இதை செய்யட்டுமா? நான் செய்யலாமா, நான் செய்ய வேண்டுமா?" என்றெல்லாம்

கேட்கவேண்டிய அவசியமில்லை. அது அப்படி செய்வதில்லை. அது தன் விருப் பப்படி செய்கிறது. கிருபை இராஜாதிபத் தியமுள்ளது. எனவே அவர் மிகவும் கேடு கெட்டவனையும், மிகவும் மோசமானவ னையும், மிகவும் நன்னடத்தை கெட்டவ னையும் இரட்சிக்க முடியும். அவர் மிகவும் வியாதிப்பட்டவனையும் சுகமாக்க முடியும். அல்லேலூயா!

73. என்னைப் போன்ற ஈனனை அவரால் இரட்சிக்க முடியும். அவர் அப்படி செய்தார். அது என்ன? கிருபை! வில்லியம் பிரன்ஹாம், ஒரு குடிகாரனின் மகன். அதனால் ஒன்றுமில்லை. தேவனு டைய கிருபை என்னை இரட்சித்தது.

“நான் கெட்ட ஸ்திரீயின் மகள்” அதனால் ஒன்றுமில்லை. தேவனுடைய கிருபை உன்னை இரட்சித்தது. அது இராஜாதிபத்தியமுள்ளது. அது யாரையும் ஒன்றும் கேட்க வேண்டிய அவசிய

மில்லை. ஆமென்! அதைக் குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். அல்லேலூயா!

அது மிகுந்த கேடுகெட்ட பாவியையும் எடுத்து அவனை உறைந்த மழையைப் போல் வெண்மையாக்க முடியும். அது யாரையும் கேட்கவேண்டிய அவசிய மில்லை. ஓ, அது இராஜாதிபத்திய முள்ளது.

கவனியுங்கள், வேகமாக பார்ப்போம். இப்பொழுது சீக்கிரமாக கவனியுங்கள், அது சிலுவையில் நிரூபிக்கப்பட்டது. அங்கு மிகவும் கேடு கெட்ட ஒரு கள்ளன் தொங்கிக் கொண்டிருந்தான். அவன் மரிக்கத் தகுதி வாய்ந்தவன். அவனுடைய சிந்தையில் தேவன் இருக்கவேயில்லை. அவன் அதைக் குறித்து ஒன்றுமே நினைத் தது கிடையாது. ஆனால் சிலுவையி லிருந்து, அவனுடைய முனகுகளுக் கிடையே, இரத்தம் தோய்ந்த அவனுடைய உதடுகளிலிருந்து, “ஆண்டவரே, என்

மேல் கிருபையாயிரும்” என்னும் சத்தம் எழுந்தது.

அப்பொழுது வேறொரு சத்தம் இரத்தம், கண்ணீர், வேதனை இவைகளுக் கிடையே எழுந்தது. கிருபை அதை இறுகப்பற்றிக் கொண்டு, “இன்றைக்கு நீ என்னுடனே கூட பரதீசிலிருப்பாய்” என்றது. கிருபை அவ்வாறு செய்தது. அந்த கள்ளன் எப்படி தனக்குத்தானே உதவி செய்து கொண்டிருக்க முடியும்? ஆதாம் எப்படி தனக்கு தானே உதவி செய்து கொள்ள முடியாமலிருந்ததோ, எப்படி ஏவாள் தனக்குத்தானே உதவி செய்ய முடியாத நிலையிலிருந்தாளோ, எப்படி நான் எனக்கு உதவிசெய்து கொள்ள முடியாத நிலையில் உள்ளேனோ, நமது காலணிகளை அணிந்து எப்படி நாம் ஆகாய விரிவில் நடந்து செல்ல இயலாதோ, அதே நிலையில் தான் அந்த கள்ளனும் இருந்தான். நம்மால் அப்படி செய்ய முடியாது. ஆனால் தேவனுடைய

கிருபை அதைக் குறித்து ஏதாவதொன்றை செய்ய முடியும். அது செய்கின்றது! தேவனுடைய இராஜாதிபத்திய கிருபை மரித்துக் கொண்டிருந்த அந்த கள்ளனிடம் வந்து, ''இன்றைக்கு நீ என்னுடனே கூட பரதீசிலிருப்பாய்“ என்றது, ஓ அதை சிந்தித்து பாருங்கள்! அது அற்புதமானது.





# தேவனுடைய கிருபையினால் நாம் கைவிடப்படுவதில்லை

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 63-09-01E பதறல்

40. இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய கரத்தைக் கண்டனர். அன்றிரவு அவர்கள் இராப்போஜனத்தை (பஸ்காவை) பதறும் நிலையில் ஆசரித்தனர். ஏனெனில் ஏதோ ஒன்று நிகழவிருக்கின்றது என்று அவர்களுக்குத் தெரியும்.

**நாமும் கூட ஏதோ ஒன்று நிகழப் போகின்றது என்று அறிந்திருக்கிறோம்.**

**கர்த்தருடைய வருகை சடுதியாக இருக்குமென்று (மணவாட்டி) இரகசியமாக எடுத்துக் கொள்ளப்படுவாள் என்றும் ஞாபகமிருக்கட்டும்.**

**அவர் இரவில் திருடன் வருகிற விதமாய் வந்து அவளைக் கொண்டு செல்வார்.**

**நமது குடும்பத்தின் அங்கத்தினர் திடீ ரென்று சென்றுவிட்டனர்; நாம் கைவிடப் பட்டோம் என்று நினைக்கும்போது! அது நம்மை பதறச் செய்ய வேண்டும். தேவ னுடைய கிருபையினால் நாம் கைவிடப் படுவதில்லை.**

**ஆண்டவரே, எனக்கு விருப்பமில்லா தது ஏதாவது ஒன்றிருக்குமாயின், அது கைவிடப்படுதலேயாகும். என்னைக் கைவிடாதேயும், ஆண்டவரே.**

சில நாட்கள் முன்பு, மெல்ஜான்சன் இந்தப் பாட்டை பாடுவதைக் கேட்டேன்.

என் கண்ணீர் கீழே விழும்போது என்னை நினைவு கூரும்

(ஆமென்)

என் நண்பர்கள் சுற்றிலும் இல்லாத போது என்னை நினைவு கூரும்.

யோர்தான் நதியை நான் கடக்கும் போது

பட்டியலில் நீர் பெயரழைக்கும் போது என்னை நினைவு கூரும்

41. **ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவ புஸ்தகத்தில் என்னுடைய பெயர் எழுதப்பட்டிருக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.**

**பெயரழைக்கப்படும் போது அவர் என்னை நினைவுகூர வேண்டுமென்று விரும்புகிறேன். அது நம்மில் பதறலை உண்டாக்க வேண்டும்.**


“**மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான் தானே ஆகாதவனாய் போகாதபடிக்கு...**” (1 கொரி 9:27) **என்று பவுல்**

**கூறினானல்லவா?** (ஆங்கிலத்தில் Castaway அதாவது தள்ளப்பட்டு விடுபவனாய் இராதபடிக்கு என்றும் அர்த்தத்தில் எழுதப்பட்டுள்ளது - தமிழாக்கியோன்) **அவ்விதமாகவும் சம்பவிக்கும்.**

**எனவே இத்தனை ஆண்டு காலமாக பிரசங்கம் செய்த பின்பும், அவருக்கு தவறிழைக்கும் ஒரு நிலையை அடைவேனோ என்று சிந்தனை செய்து பார்க்கும் போது, அது என்னை பதறும் நிலையில் ஆழ்த்துகின்றது.**

**நான் அடுத்தபடியாக என்ன செய்ய வேண்டும்? செய்ய வேண்டியது என்னவென்று அறியாதவனாய், அது என்னை பயத்திற்குள்ளாக்கிறது. அது என்னை மலைகளிலும் பள்ளத்தாக்குகளிலும் எரிந்து விடுகிறது.** அது மிகவும் கடின

மான ஒரு நிலை. ஏனெனில் நான் ஜனங்களுடன் கூட இருக்கும்போது அவர் களில் சிலரை கிறிஸ்துவுக்காக ஆதாயப் படுத்திக் கொள்ள வேண்டுமென்று, நான் எல்லோருக்கும் எல்லாமாயிருந்து கொண்டு, அதே சமயத்தில் அந்த அடை யாளத்தை எனக்கு முன்னால் நிறுத்திக் கொண்டிருக்க வேண்டியதாயுள்ளது பாருங்கள்?




மரிப்பதற்கு நீங்கள்
தகுதியுள்ளவர்களாகும்
வரைக்கும் நீங்கள் வாழ்வதற்கு
தகுதியுள்ளவர்களல்ல. அது
உண்மை
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

---

## செய்தி: 63-09-01E பதறல்

---

45. **அவருடைய வருகையின் அடையாளங்கள் கிறிஸ்துவின் ஒவ்வொரு உறுப்பினரையும் பதறும் நிலைக்குக் கொண்டு செல்லவேண்டும்.**


**நமது ஆத்துமாக்களுக்காகவும், இனி வரப்போகும் நல்வாழ்வுக்காகவும் நாம் கவலை கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம்.**

**நாம் உலகம் முழுவதையும் ஆதாயப் படுத்தினாலும் அதனால் லாபம் என்ன?**


நாம் எதற்காக வாழ்ந்து கொண்டிருக் கிறோம்? நாம் எதற்காக உழைக்கிறோம்? நாம் எதற்காக உண்கிறோம்? நாம் எதற்காக தத்தளித்துக் கொண்டிருக்கி

றோம்? நாம் வாழ்வதற்காகவே, நாம் எதற்காக வாழ்கிறோம், மரிப்பதற்காக.

**மரிப்பதற்கு நீங்கள் தகுதியுள்ளவர்களாகும் வரைக்கும் நீங்கள் வாழ்வதற்கு தகுதியுள்ளவர்களல்ல. அது உண்மை.**



**ஜனங்கள் தாங்கள் அழைக்கப்படாத வேறொருவரின் ஊழியத்தை ஏற்று பாவனை செய்யும் போது அது அவர்களை முடிவில் வெடித்து சிதறச் செய்துவிடும், நீங்கள் தேவனால் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும்.**



செய்தி: 62-0513E அழுத்தத்தை வெளியேற்றுதல்

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து


நீதிமொழிகள் 17:6
பிள்ளைகளின் பிள்ளைகள்
முதியோருக்குக் கிரீடம்;
பிள்ளைகளின் மேன்மை
அவர்கள் பிதாக்களே.


சங்கீதம் 71:9
முதிர்ந்த வயதில் என்னைத்
தள்ளிவிடாமலும், என் பெலன்
ஒடுங்கும்போது என்னைக்
கைவிடாமலும் இரும்.

சகோ.வில்லியம் பிரன்ஹாம்

செய்தி: **பதறல், 63-09-01E**

ஒ, மிருதுவான இரட்சகரே என்னைக் கடந்து சென்றுவிடாதேயும்,
என் எளிமையான கூக்குரலைக் கேட்டருளும்,
மற்றவர்களை நீர் சந்திக்கும் போது,
என்னைக் கடந்து சென்று விடாதேயும்



கர்த்தருக்கு நன்றி செலுத்தாமல், நீங்கள் எந்த உணவையும் புசிக்கலாகாது. ஏனென்றால் அது தேவனுடைய வார்த்தையினாலும், ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படுகிறது. பாருங்கள்? அதை நீங்கள் புசிக்கும் போது கூற வேண்டியதாவது: “கர்த்தராகிய இயேசுவே, நீர் இந்த ஆகாரத்தை எனக்காக ஆயத்தப்படுத்தினீர். இப்போது, விசுவாசத்தினாலே, இந்த ஆகாரத்தைப் பரிசுத்தப்படுத்துகிறேன்; அது எங்கள் சரீரங்களுக்கு பெலத்தை அளிப்பதாக.”

செய்தி: கேள்விகளும் பதில்களும் #4, 64-0830 E, பத்தி எண் 181

சகோ.வில்லியம் பிரன்ஹாம்



# கழுகின் சத்தம்



நவம்பர் 29,
2023

3

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து